**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | -திரு.சுதாகர் | **PW-47** | தொழில் | - |
| த/க பெயர் | -கோபால் | | வயது | - 39 |
| கிராமம் | - | | | |
| தாலுக்கா | - | | | |

**(17 - ம் எதிரி ஆஜர், 2, 3, 4, 6 முதல் 16, 18 முதல் 30-ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை:-**

நான் சேலம் மாவட்டம் தெத்திகிரி பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆந்திர பிரதேசம் மாநிலத்தில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் **B.Sc., (Chemistry)** மற்றும் **B.Ed.,** பட்டப்படிப்பு படித்துள்ளேன். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர், அவர்கள் பெயர் என்னவென்றால், எனக்கு மூன்று தம்பிகள் மற்றும் ஒரு தங்கை உள்ளனர். தங்கை பெயர் சுதா ராணி. தம்பிகளின் பெயர் கண்ணன், ஆறுமுகம், ராஜகணபதி ஆகும். என் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்ன படித்துள்ளார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் என்னால் சொல்ல இயலாது நான் பட்டப்படிப்பு இறுதி ஆண்டு படிக்கும் போது காதல் திருமணம் செய்து கொண்டு வீட்டிலிருந்து வெளியே வந்து விட்டேன், அதிலிருந்து என் வீட்டில் உள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை இல்லை. அதனால் என் தம்பிகள்

மற்றும் தங்கை என்ன படித்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. ஆஜரில் உள்ள எதிரி ஸ்ரீதர் ராஜ் **(A – 17)** எனக்கு தெரியுமானால் தெரியாது. என்னுடைய **B.Sc., (Chemistry)** மற்றும் **B.Ed.,** பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அசல் என்னவானது என்றால் நான் சென்னையில் **Henkel Teroson Limited** நிறுவனத்தில் வேலை பார்த்த போது என்னுடைய அசல் சான்றிதழ்கள் வெரிஃபிகேஷன்காக ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது தொலைந்து விட்டது. இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சரியாக நினைவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இரண்டு மூன்று முறை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வரச் சொல்லி ஒரு உதவியாளர் பேசினார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை சிபிசிஐடி காவல்துறையினர் விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் எனது B.Sc., B.Ed., படித்து முடித்த பின்பு சென்னை இருகாட்டு கோட்டையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரி. அந்த சமயம் நான் நேதாஜி கோச்சிங் சென்டரில் படித்து வந்தேன் என்றும், அந்த சமயத்தில் எதிரி ஸ்ரீதர் ராஜ் எனக்கு நண்பன் ஆனார் என்றும், அவர் அரசு அதிகாரியாக இருப்பதாகவும் அரசு வேலை வாங்கி தருவதாகவும், வேலை வாங்கித் தந்த பின்பு ரூபாய் 5 லட்சம் தர வேண்டும் என்றும், என்னிடம் பேசி வந்தார் என்றும், நான் என் குடும்ப சூழ்நிலையைச் சொல்லி உடனே என்னால் பணம் தர இயலாது என்று சொன்னேன் என்றும், அப்பொழுது அவர் எனது ஒரிஜினல் கல்லூரி சான்றிதழைக் கொடுத்தால் போதும் என்றும், வேலை வாங்கித் தந்த பின்பு ரூபாய் 3 லட்சம் தந்தால் போதும் என்றும் அவர் சொன்னார் என்றும், அதன் அடிப்படையில் நான் எனது B.Sc., (Chemistry) மற்றும்

B.Ed., சான்றிதழ்களை அவரிடம் கொடுத்தேன் என்றும் மேலும் என் தம்பி கண்ணனின் 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்களை கொடுத்தேன் என்றும், மேலும் எதிரி ஸ்ரீதர் ராஜ் எனது மற்றும் என்னுடைய தம்பியின் சான்றிதழ்களை திருப்பிக் கொடுக்கவில்லை என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க போலீஸ் என்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரியை எனக்கு யார் என்று தெரியாது என்றும், எதிரியிடம் என் சான்றிதழ்கள் மற்றும் என் தம்பியின் சான்றிதழ்களை கொடுக்கவில்லை என்றும், என் சான்றிதழ்கள் தொலைந்து விட்டதாகவும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 17, 18, 19, 22, 23, 24, 25, 26 முதல் 30-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**